21.06.2024

O.S.No. 184/2015

வா.சா.1.திரு.உடையப்பன், த.பெ.சண்முகம் பிள்ளை

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. நான் B.A. பட்டதாரி ஆவேன். பொதுவாக நீர்நிலை புறம்போக்குகளையும், நீர் பிடிப்புகளையும், ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதேபோல், நீர்நிலை புறம்போக்குகளையும், நீர் பிடிப்புகளையும் யாரும் உரிமை கொண்டாட முடியாது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து மொத்த விஸ்தீரணம் சுமார் 7 ஏக்கர் ஆகும். எந்த பகுதியில் எவ்வளவு விஸ்தீரணத்தில் பிரதிவாதிகள் சாமி கும்பிடுகிறார்கள் என்பதையும், நான் எவ்வளவு விஸ்தீரணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் 4 ஏர்ஸ் நிலத்தில் நாங்கள் கொட்டம் அமைத்துள்ளோம் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். நான் கூறுவதுபோல் அவ்வாறு எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் நீர்பிடிப்பு பகுதியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.52-ல் நான் கூறுவதுபோல் எங்களுக்கு பாத்தியப்பட்ட கொட்டம் இருப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த கொட்டத்திற்கான மின் இணைப்பிற்கான ரசீதை நான் தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக மின் இணைப்பு பெற வேண்டும் என்றால் அந்த வீட்டிற்கான வரி ரசீதை தாக்கல் செய்தால் தான் மின் இணைப்பு வழங்கப்படும் என்றால் சரிதான். நான் கூறும் கொட்டத்திற்கு வீட்டுவரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரச்சனை ஏற்பட்டபின்பு வீட்டு வரி இரசீது போட்டுத் தர மறுத்துவிட்டார்கள். பிரச்சனை ஏற்படுவதற்கு முன்பு நான் எந்த வரி இரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வீட்டுவரி இரசீதை மின் இணைப்பு பெறுவதற்காக கொடுத்துவிட்டேன். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 மின் இணைப்பு இரசீதுகள் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத இரசீதுகள் என்றாலும், அவை சாட்சியமாக கருத முடியாது என்றாலும் சரியல்ல. எனது தந்தை இந்த வழக்கிற்கு முன்பு தாக்கல் செய்த வேறு வழக்கு சங்கதிகள் எல்லாம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு வழக்கு தொடுப்பதற்கு சம்பபந்தமாக ஆலோசனை தருவேன் என்றால் சரியல்ல. அவர் அறிவார்ந்தவர் என்பதால் அவருக்கு ஆலோசனை சொல்வதற்கு எனக்கு தகுதியில்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 உத்தரவில் பிரதிவாதி தரப்பினர் தாவா சொத்தில் ஒருநாள் மட்டும் தெய்வ வழிபாடு செய்வதற்கும், அன்னதானம் போடுவதற்கும்

உரிமை உள்ளது எனவும், அந்த சொத்தில் உரிமை கோர முடியாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்பு தற்போதுவரை வருடவருடம் தாவா சொத்தில் பிரதிவாதி தரப்பினர் திருவிழாவின்போது தெய்வ வழிபாடு நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் ஆட்சேபனை செய்தும் அவர்கள் கேட்கவில்லை. பல மனுக்கள் கொடுத்தும் நடவடிக்கையில்லை. பிரதிவாதிகள் தாவா சொத்தில் திருவிழாவின்போது வழிபாடு நடத்திக் கொள்ளலாம் என வட்டாட்சியர் அவர்கள் வா.சா.ஆ.11 உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். அந்த உத்தரவுக்கு எதிராக தடையாணை எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான். ஆனால் RDO-விடம் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. நான் தாவா சொத்து சம்பந்தமான நீர்பாசன ஆயக்கட்டுக்காரர்கள் என்ற அடிப்படையில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னைத் தவிர வேறு ஆயக்கட்டுக்காரர்கள் யாரும் பிரதிவாதிகள் தாவா சொத்தில் தெய்வ வழிபாடு நடத்துவதை ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆட்சேபித்துள்ளார்கள். நான் எனக்காக மட்டும் தனிப்பட்ட முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதிக்கப்பட்டவன் நான் என்பதால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொன்னாட்சி குளம் ஆயக்கட்டுதாரர் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. நான் தாவா சொத்து ஆயக்கட்டுதாரர் அல்ல என்றாலும், அவ்வாறு ஆயக்கட்டுதாரராக இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு எதிராக வட்டாட்சியர் வழங்கிய ஆக்கிரமிப்பு அறிவிப்புக்கு எதிராக எனது தந்தை தொடுத்த Writ மனுவில் வா.சா.ஆ.9 உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு எதிராக Writ மேல்முறையீடு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், எனது நிரூபண வாக்குமூலத்தில் Writ மேல்முறையீடு மனு நிலுவையில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் தவறுதலாக சொல்லிவிட்டேன். மேற்படி, தள்ளுபடி Writ மேல்முறையீடு மனு உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால், நான் வேறு Writ மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளேன். அந்த Writ மனு 2016 ம் ஆண்டு தாக்கல் செய்தேன். மேற்சொன்ன Writ மேல்முறையீட்டு மனு 2018 ம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

5. எனது தந்தையின் புகாரின்பேரில் பிரதிவாதிகள் மீது போடப்பட்ட வா.சா.ஆ.17 முதல் தகவல் அறிக்கை என்ன ஆனது என்றால் பொருண்மை தவறு என்று முடித்துவிட்டார்கள். அதை எதிர்த்து நான் மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. பொதுவாக நீர்நிலைப் புறம்போக்குகளில் யாரும் எந்த உரிமையும் கோர முடியாது என்பதாலும் தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் நீர்நிலைப் புறம்போக்கு என

காட்டப்பட்டுள்ளதால் அதில் எனக்கு எந்தவித அனுபவமோ, பாத்தியதையோ ஏற்படாது என்றாலும் தாவாவில் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.